**கூட்டுறவு**

(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

**கொள்கை விளக்கக் குறிப்பு**

**2017–2018**

**மானியக் கோரிக்கை எண். 12**

**செல்லூர் கே. ராஜூ**

**கூட்டுறவுத் துறை அமைச்சர்**

தமிழ்நாடு அரசு

2017

## பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | **1–5** |
| I. | கூட்டுறவுக் கடன் அமைப்பு | **6–43** |
| II. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | **44–66** |
| III. | நுகர்வோர் கூட்டுறவுகள் | **67–77** |
| IV. | சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள் | **78–83** |
| V. | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | **84–92** |
| VI. | கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | **93–102** |
| VII. | கூட்டுறவுத் தேர்தல் | **103–104** |
| VIII. | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம் | **105–107** |
| | நிறைவுரை | **108–109** |

# முகவுரை

**1.** இந்தியாவிலேயே கூட்டுறவு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. திருவள்ளூர் மாவட்டம் திரூரில் 1904ஆம் ஆண்டு நாட்டிலேயே முதல் கூட்டுறவு சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதே ஆண்டில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கமும், பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு நகர வங்கியும் தமிழ்நாட்டில் துவங்கப்பட்டன. இந்தியாவில் கூட்டுறவு இயக்கமானது விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளுக்கு மூலகாரணமாக விளங்குகிறது. கூட்டுறவு இயக்கமானது வேளாண்மைக் கடன், விவசாய இடுபொருட்கள் வழங்குவதை உறுதி செய்தல், விவசாய விளைபொருட்கள் விற்பனை, பால்வளம் மற்றும் இதர சார்ந்த பணிகளுக்கு உதவிசெய்தல் போன்ற பணிகளின் மூலம் பிரதம அமைப்புகளின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியாக உள்ளன.

**2.** கூட்டுறவுகள், ஏழை மக்கள் மற்றும் அடித்தட்டு மக்களுக்கு பயிர் கடன் வழங்கியும், பயிர்கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு



வட்டியில்லா பயிர்கடன் வழங்கியும், அனைத்து விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கான முதலீட்டுக்கடன்கள் வழங்கியும், வேளாண்மை விளைபொருட்களை சேமிக்க கிடங்கு வசதிகளை ஏற்படுத்தியும் மற்றும் உரிய காலத்தில் உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை வழங்கியும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றுகின்றன. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் பங்கு மூலதன உதவி மற்றும் வட்டியில்லா கடன்கள் அளித்து முக்கிய பங்கு வகிக்கின்றன. மகளிர் மேம்பாட்டிற்காக, உழைக்கும் மகளிர் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் ஆகியோருக்கு வட்டியில்லா பங்கு மூலதனக்கடன் மற்றும் கடன்களை வழங்கி வருகின்றன. கூட்டுறவு கடன் சங்கங்கள், நகைக்கடன், சிறுவியாபாரிகளுக்கு சிறுவணிகக்கடன், வீட்டுவசதிக்கடன் மற்றும் சிறுபோக்குவரத்து வாகனக்கடன் ஆகியவற்றை வழங்கி வருகின்றன.

**3.** கூட்டுறவுகள், கூட்டுறவு பண்டக சாலைகளை நடத்துவதன் மூலம், அத்தியவாசியப் பொருட்களை நியாயமான விலையில் கிடைப்பதற்கும் அப்பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும் பெரிதும் உதவுகின்றன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாயிகளின் விளைப்பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் பொருட்டு தேவையான உதவிகளை வழங்குவதில் முக்கிய பணியாற்றுகின்றன.

**4.** தமிழ்நாட்டில், பொதுவிநியோகதிட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கங்கள் **32,715** நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன.

**5.** மலைவாழ் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் உற்பத்தி பொருட்களான, சாமை, வரகு, புளி, மற்றும் தேன் ஆகியவற்றை விற்பனை செய்ய துணை செய்வதுடன் அவர்களுக்கு நல்ல விலை கிடைத்திட, மலைவாழ்மக்கள் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் உதவிசெய்கின்றன. மேலும் மலைவாழ் மக்களுக்கு உற்பத்தி பொருட்களை



பொது வணிக பெயரில் சிப்பமிட்டு, சந்தையிட மலை வாழ் மக்கள் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் நிதி உதவி செய்கின்றன.

**6.** கூட்டுறவுகள், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பொருட்டு கீழ்குறிப்பிட்டுள்ள தற்போதைய சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகளில் தீவிரமாக பங்காற்றியுள்ளன.

**i)** கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் **74** பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம், வெளிச்சந்தையை விட குறைவான நியாயமான விலையில், பசுமை காய்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த பசுமை காய்கறிகள், நேரடியாக, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து நுகர்வோருக்கு நியாயமான விலையில் மேற்குறிப்பிட்ட பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. காய்கறி விளைவிப்போரை நுகர்வோருடன், இணைத்து, இந்த பண்ணை பசுமைக்கடைகள் பொது சேவை புரிவதால், விவசாயிகள் மற்றும் நுகர்வோர் நலன்கள் பெரிதும் பாதுகாக்கப்படுகின்றன.

**ii)** தரமான மருந்துகள் 15 சதவீதம் தள்ளுபடியில் கூட்டுறவுகள் நடத்தும் **"அம்மா மருந்தகம்"** மூலம் பொது மக்கள் நலனுக்காக விற்பனை செய்யப்படுகின்றன.

**7.** கூட்டுறவுகளில் மக்களாட்சி ஜனநாயகத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், 2013ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு 14 ஆண்டுகள் கால இடைவெளிக்கு பின்னர் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

**8.** தமிழ்நாடு அரசு, 31.3.2016 அன்று நிலுவையிலிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகள் பெற்ற குறுகிய கால பயிர்கடன்கள், மத்திய கால (விவசாயம்) கடன்கள், நீண்டகால கடன்கள் (பண்ணை சார்ந்த கடன்கள்) ரூ.5,318.73 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 12,02,075 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.



# இயல்–1

# கூட்டுறவுக் கடன் அமைப்பு

## 1. முன்னுரை

**1.1.** கூட்டுறவு கடன் அமைப்புகளின் வளர்ச்சியில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. கூட்டுறவு நிறுவனங்கள் சேவை மனப்பான்மையுடன் பொது மக்களுக்கு, குறிப்பாகக் கிராமப்புற மக்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்கி அவர்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. இந்நிறுவனங்கள், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் அமைந்துள்ளன.

**1.2.** தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுக் கடன் அமைப்புகள் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, நகரக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் என நான்காக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

**1.3.** குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. நீண்ட காலக் கடன் அமைப்பு வட்ட/வட்டார அளவில் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும் உள்ளடக்கியுள்ளது. நகரக் கூட்டுறவு வங்கி மற்றும் நகரக்கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கிய நகரக்கூட்டுறவு கடன் அமைப்பானது நகரம் மற்றும் புற நகர் பகுதிகளில் உள்ள நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களுக்கு பல்வேறு வங்கி சேவைகளை வழங்கி வருகின்றன. பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், மத்திய, மாநில அரசு பணியாளர்கள், அரசு சார்ந்த பொது நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோரின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.



## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

தமிழ்நாட்டில் குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பானது, மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியினையும், மாவட்ட அளவில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் 4467 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்டதாக உள்ளது.

### 2.1. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது, 1905 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாக செயல்படுகிறது. இவ்வங்கி தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் கடன் கொள்கைகளை வகுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறுநிதி உதவி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற உயர் நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின் மூலம்

நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. இவ்வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கடன் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. தலைமைக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியைக் கையாள்வதுடன், நிதிமேலாண்மை குறித்த வழிகாட்டுதலையும் அளிக்கிறது. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் வேளாண் கடன் பணியாளர் கூட்டுறவுப் பயிற்சி மையத்தின் மூலம், மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் இலக்கினை அடையும் நோக்கத்துடன், பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும், இவ்வங்கி சென்னையில் அமைந்துள்ள 47 கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு வங்கிச் சேவையை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்ந்து நிதிநிலையில் வலுவான அமைப்பாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு:



(ரூ.கோடியில்)

| **வ. எண்** | **விவரம்** | **2012-13** | **2013-14** | **2014-15** | **2015-16** | **2016-17*** |
|---|---|---|---|---|---|---|
| **1** | உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | **191.91** | **269.33** | **282.44** | **287.30** | **291.77** |
| **2** | மாநில அரசின் பங்கு | **0.26** | **20.26** | **20.26** | **20.26** | **20.26** |
| **3** | ஒதுக்கீடு மற்றும் உபரி | **651.47** | **797.66** | **827.21** | **855.63** | **896.92** |
| **4** | வைப்புகள் | **7,788.13** | **9,617.40** | **7,767.79** | **8,927.93** | **11,240.46** |
| **5** | பெறப்பட்ட கடன்கள் | **3,139.54** | **2,652.93** | **3,309.24** | **3,037.81** | **2,451.56** |
| **6** | நிகர இலாபம் | **43.24** | **32.21** | **41.38** | **43.31** | **49.59** |

* தணிக்கைக்கு முன்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவையினை (Core Banking Solution) நடைமுறைப்படுத்தியுள்ளது. நவீன வங்கியியல் வசதியான தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களை (Automated Teller Machine) சென்னையில் 6 இடங்களில் நிறுவியுள்ளது. இந்தியாவில் எந்த இடத்திற்கும் நிகழ் நேர மொத்தத் தீர்வு (**Real Time**

Gross Settlement) மற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (National Electronic Funds Transfer) மூலம் உடனுக்குடன் மின்னணு பணப்பரிமாற்றம் செய்திடும் வசதிகளையும் இவ்வங்கி பெற்றுள்ளது. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு ஏடிஎம் ருபே பற்று அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டைகளை இந்தியாவிலுள்ள எந்த ஒரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலும் பயன்படுத்தலாம். மேலும், அலைபேசி வங்கியியல் சேவை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு 11.01.2016 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

தலைமை வங்கி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியினையும் வைப்புத் தொகை உத்தரவாத நிதியினையும் பராமரித்து வருகிறது. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது கூட்டுறவு நிறுவனங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தப் பயன்படுத்தப் படுகிறது. வைப்புத் தொகை உத்தரவாத நிதியானது பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு நிதிகளைத் திரும்ப வழங்க இயலாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொதுமக்களுக்குத் திரும்ப



வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. வைப்புத் தொகை உத்தரவாத நிதி பொதுமக்களிடையே கூட்டுறவு நிறுவனங்களின் மீதான நம்பிக்கையை மீட்பதிலும் நம்பகத்தன்மையை உயர்த்துவதிலும் துணை புரிகிறது. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதிக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதியளித்து வருகின்றன. வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நிதியளித்து வருகின்றன. 31.03.2017 தேதியில் தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் ரூ.28.07 கோடியும், வைப்புத் தொகை உத்தரவாத நிதியில் ரூ.174.76 கோடியும் உள்ளது.

## 2.2. மத்திய கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் மற்றும் மறுநிதி மூலம் நிதி ஆதாரங்களைப் பெறுகின்றன. இவ்வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுகள், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச்

சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் போன்ற இணைப்புச் சங்கங்களுக்கு கடன் மற்றும் வங்கியியல் தொடர்பான சேவைகளை வழங்கி வருகின்றன.

இந்திய ரிசர்வ் வங்கி, 23 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் வங்கியியல் உரிமம் வழங்கியுள்ளது. இவ்வங்கிகள் வட்ட மற்றும் வட்டார அளவில் 845 கிளைகளைக் கொண்டுள்ளன. இக்கிளைகள் மூலமாக பொதுமக்களுக்கு வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன.

மத்திய கூட்டுறவு வங்கிகளின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்பாடுகளின் ஒப்பீட்டு விவரம் பின்வருமாறு :-

(ரூ.கோடியில்)

| வ. எண் | விவரம் | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17* |
|---|---|---|---|---|---|---|
| **1** | உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | **852.94** | **973.37** | **1,052.70** | **1248.49** | **1255.72** |
| **2** | மாநில அரசின் பங்கு | **70.45** | **70.45** | **63.70** | **63.70** | **71.31** |
| **3** | ஒதுக்கீடு மற்றும் உபரி | **2,709.46** | **2,941.57** | **3,351.33** | **3,537.67** | **3,707.54** |
| **4** | வைப்புகள் | **17,985.72** | **21,309.87** | **22,748.33** | **25,667.74** | **28,343.9** |
| **5** | பெறப்பட்ட கடன்கள் | **7,170.90** | **5,750.20** | **5,609.60** | **5,043.30** | **5,322.85** |

* தணிக்கைக்கு முன்



மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வைப்புகளைத் திரட்டுவதிலும் கடன் வழங்குவதிலும் மெச்சத்தக்க முன்னேற்றம் அடைந்தது மட்டுமல்லாமல், இணைப்புச் சங்கங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் நுகர்வோர் கூட்டுறவுகளின் கடன்களைச் சீரமைத்து வட்டிச் சுமையைக் குறைத்து இவற்றின் வணிக வளர்ச்சிக்கும், நிதி நிலை மேம்பாட்டிற்கும் உதவி புரிந்து வருகின்றன.

அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் **2012–2013** ஆம் ஆண்டில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solution) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் வங்கிகளின் கிளை களுக்கிடையே மின்னணு பணபரிமாற்றம் நடைபெற ஏதுவாக்கப்பட்டதோடு நிகழ் நேர மொத்த தீர்வு (Real Time Gross Settlement) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Funds Transfer) போன்ற பணப்பரிமாற்ற வசதிகள் பொதுமக்களுக்கு கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகள், மார்ச்

2017 முதல் குறுஞ்செய்தி வசதியினை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.06.2017 அன்று மத்திய கூட்டுறவு வங்கிகளில், புதிய ஏடிஎம் ரூபே பற்று அட்டை மற்றும் ரூபே விவசாய கடன் அட்டை சேவைகளை துவக்கி வைத்தார்கள். மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டையும் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூபே வேளாண் கடன் அட்டைகளையும் வழங்க உள்ளன. மத்திய கூட்டுறவு வங்கிகளில் புதிதாக நிறுவப்பட்ட 40 தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்கள், 12.06.2017 அன்று செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டன. இது, தமிழ்நாட்டின் கூட்டுறவு வங்கியியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

மத்திய கூட்டுறவு வங்கிகளின் செயல்திறனை மேம்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. 2016–17 ஆம் ஆண்டில் பணியாளர்களின் நலன்கருதி, கடன் மதிப்பீடு, நிதிமேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற



சொத்து மேலாண்மை போன்ற பொருள்களில் பணியாளர்களுக்கு 67 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

### 2.3. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

(i) தமிழ்நாட்டில் 4467 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை நியாயமான வட்டி விகிதங்களில் வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். பயிர்க்கடன் மற்றும் பண்ணை இயந்திரங்கள் வாங்குதல், நுண் நீர்பாசனம், கறவை மாடுகள் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படும் கடன்கள் வேளாண் கடன்களாகும். வீட்டுவசதிக் கடன், சுய உதவி குழுக்களின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் கடன்கள் போன்றவை வேளாண் சாரா கடன்களாகும். விவசாயிகள், குழுக்களாக சேர்ந்து கடன் பெறும் வசதி பெரிதும் ஊக்குவிக்கப்படுகிறது. இச்சங்கங்கள், விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு வேளாண் கருவிகள்

விற்பனையையும் மேற்கொள்கின்றன. இது தவிர கிராமப்புறங்களில் அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் 23501 பொது விநியோகத்திட்டக் கடைகளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொது மக்களுக்கு வேளாண் பாதுகாப்பு மையம், வேளாண் சேவை மையம், பொது சேவை மையம் ஆகியவற்றின் மூலம் பல்வேறு பணிகளைச் செய்திடும் பன்முகப் பணி மையங்களாக மாறி வருகின்றன.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடந்த ஐந்தாண்டுகளில் கடன் வழங்கிய விவரம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரம் பின்வருமாறு:-

(ரூ.கோடியில்)

| விவரம் | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | 2016–17 |
|---|---|---|---|---|---|
| வைப்புத் தொகை | 5,633.79 | 5,995.49 | 5,987.72 | 6,874.66 | 7,352.64 |
| கடன் வழங்கியது | 20,582.03 | 20,989.51 | 20,326.63 | 19,409.52 | 15,403.51 |



**2.4. கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள்**

**(i) பயிர்க்கடன்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் கடன்களில் முக்கியமானது பயிர்க்கடன் ஆகும். பயிர்க் கடன் வழங்குவதில் அனைவரையும் உள்ளடக்கும் வகையில் ஆதிதிராவிடர் / பழங்குடியின விவசாயிகள் உள்ளிட்ட புதிய விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகளின் வருவாயினை உயர்த்திடவும், விவசாய உற்பத்தியினை அதிகரிக்கவும் குறைந்த வட்டியிலான கடன் வழங்கும் திட்டம் நடைமுறையில் இருக்க வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. அதன்படி கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான வட்டிவிகிதம் 9% லிருந்து 7% ஆக குறைக்கப்பட்டு, அதனால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்படும் 2% வட்டி இழப்பீட்டுத் தொகையினை, இந்திய அரசிடமிருந்து பெறப்படும் வட்டி மானியத் தொகையுடன் கூடுதல் மானியமாக மாநில அரசு வழங்குகின்றது. பயிர்க் கடனுக்கு 7% வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பி செலுத்தும்

விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப் படுவதில்லை. விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை அரசே ஏற்று, கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக வட்டி மானியமாக வழங்குகிறது.

2016–17 ஆம் ஆண்டில் 7,62,772 விவசாயிகளுக்கு ரூ.4,227.98 கோடிக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. அதில் 90,231 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.445.37 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு, பயிர்க்கடனை உரிய காலத்தில் திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் ஊக்கத்தொகைக்காக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

### (ii) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்

சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர் மற்றும் வாய்மொழிகுத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய 40,000 கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் உள்ளன. அனைவரையும் வங்கிப் பரிமாற்றத்திற்குள் கொண்டு



வருவதை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்குப் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இவர்கள் கூட்டாக உரங்கள் மற்றும் விதைகளை வாங்கவும், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களைக் கையாள்வதற்கும் சாத்தியமாகியுள்ளது. 2016–17 ஆம் ஆண்டில் 8,871 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.323.20 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 311 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.16.76 கோடி முதலீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

### (iii) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்

மூலதனங்களை உருவாக்கும் நோக்குடனும், நிலைத்த வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யவும், வேளாண் துறையில் முதலீடு செய்வது ஊக்குவிக்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக, 2016–17 ஆம் ஆண்டில் 26,777 விவசாயிகளுக்கு ரூ.172.74 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் 2,057 ஆதிதிராவிடர் /

பழங்குடியினருக்கு ரூ.11.44 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(iv) தானிய ஈட்டுக் கடன்**

விவசாயிகளின் உடனடி நிதித்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமான கிடங்குகளில் அவர்களின் விளைபொருட்களை இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இது சிறு மற்றும் குறு விவசாயிகள் அறுவடைக்காலங்களில் விளைபொருட்களின் விலை மிகக் குறைவாக இருக்கின்ற போது தானியங்களைச் சேமித்து வைத்து, இலாபகரமான விலை கிடைக்கின்ற போது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 2016–17 ஆம் ஆண்டில் 12,073 விவசாயிகளுக்கு ரூ.198.08 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன.

**(v) சிறு வணிகர்களுக்கான சிறு வணிகக் கடன்**

மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் தனித்தன்மை வாய்ந்த இத்திட்டத்தைச்



செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பூ வணிகம், காய்கறிகள் மற்றும் பழங்கள் வணிகம் செய்தல், பெட்டிக்கடை நடத்துதல் போன்ற சிறு வணிகங்கள் செய்பவர்களுக்கு எவ்விதப் பிணையமுமின்றி ரூ.10,000 கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2016–17 ஆம் ஆண்டில் 1,72,156 நபர்களுக்கு ரூ. 177.51 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(vi) சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதலை ஊக்குவித்து அவற்றின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 18,844 சுயஉதவி குழுக்களுக்கு ரூ.525.99 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(vii) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**

மகளிர் தொழில் முனைவோர் சிறு தொழில் தொடங்கவும், சேவை மையங்கள் அமைக்கவும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கி

வருகின்றன. 2016–17ஆம் ஆண்டில் 12,762 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.50.23 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(viii) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு ரூ.3.00 இலட்சம் வரை கடனாக வழங்குகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 8,423 மகளிருக்கு ரூ.48.94 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(ix) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்**

கூட்டுறவுச் சங்கங்கள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அவர்களின் வருமானத்தை உயர்த்திடும் செயல்களுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. 2011–12 முதல் உரிய காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்களை வழங்கி வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 5,105 மாற்றுதிறனாளிகளுக்கு ரூ.22.80 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.



**(x) கடன் சங்கங்களின் உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதன நிதி உதவி**

மாநில அரசு, கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிர், மாற்றுத்திறனாளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களுக்குச் சிறப்பு முன்னுரிமை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு பங்கு மூலதனம் மானியம் வழங்கி வருகிறது. 2015–2016 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் 600 மாற்றுத்திறனாளி உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதன மானியமாக தலா ரூ.2,500/– வீதம் ரூ.15/–இலட்சமும், நகர கூட்டுறவு வங்கிகளில் 600 மகளிர் மற்றும் 600 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன மானியமாக தலா ரூ.2,500/– வீதம் ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் 8,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக தலா ரூ.250/– வீதம்

ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. **2016–17** ஆம் ஆண்டில், **600** தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மகளிர் உறுப்பினர்களுக்கு பங்கு மூலதன மானியமாக ரூ.**2,500/–** வீதம் ரூ.**15** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(xi) பயிர்க்காப்பீடு 2016–17**

**2016–17**ஆம் ஆண்டு முதல், புதிய பயிர்க்காப்பீட்டு திட்டமான, "பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா (PMFBY)" மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். **2016–17**ஆம் ஆண்டில் **11,32,745** விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, காப்பீட்டு தொகையாக கூட்டுறவு நிறுவனங்களால் ரூ.**8,969.44** இலட்சம் காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

**(xii) வறட்சி நிவாரணம் 2016–17**

**2016–17**ஆம் ஆண்டில், வடகிழக்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக, தமிழ்நாடு அரசு



மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தது. மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வணிக வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது. விவசாயிகளின் விருப்பத்திற்கு இணங்க குறுகிய கால பயிர்க்கடன்களை மத்திய கால கடன்களாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. **31.05.2017** வரை, பயிர்க்கடன் தொகை ரூ.**144.32** கோடி மத்திய கால கடனாக மாற்றி அமைக்கப்பட்டதன் மூலம், **46657** விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**2.5. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பல்வகை செயல்பாட்டு நிறுவனங்களாக மாற்றுதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடன் வழங்கும் பணிகளை மட்டுமே செய்வதாக அல்லாமல் பல்வகை செயல்பாட்டு நிறுவனங்களாக மாற ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

**(i) வேளாண் பாதுகாப்பு மையம்**

விவசாயிகள் பயன்பெறும் வகையில் மண் பரிசோதனை, நீர்ப் பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு 190 வேளாண் பாதுகாப்பு மையங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்திலிருந்தும் 50 : 50 என்ற பங்களிப்பில் ஒவ்வொரு வேளாண் பாதுகாப்பு மையமும் ரூ.6 இலட்சம் செலவில் துவங்கப்பட்டது.

**(ii) வேளாண் சேவை மையங்கள்**

கிராமப்புறங்களில், முக்கியமான பருவ காலங்களில் வேளாண் பணிகள் மேற்கொள்வதற்கான ஆட்கள் பற்றாக்குறை பெருகிவரும் நிலையில், வேளாண்மையில் இயந்திர மயமாக்குதல் இன்றியமையாததாகிறது. இவ்வியந்திர மயமாக்குதலின் பயன்பாட்டினைப் பெற சிறு மற்றும் குறு விவசாயிகளின் சிறு விளை நிலங்களும், குறைந்த வளமும் சாதகமாக இல்லை. எனவே 2,104 வேளாண்மை சேவை மையங்கள்,



நியாயமான வாடகையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் இடுபொருட்கள் வழங்குவதற்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் விவசாயிகள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் இயந்திரமயமாக்குதலின் பயன்பாட்டினை பெற்று தங்கள் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்திக் கொள்ள இயலும். இந்த வேளாண் சேவை மையங்கள், மினி டிராக்டர்கள், பவர்டில்லர் மற்றும் நெல் நடவு இயந்திரங்கள் ஆகியவற்றை வாடகைக்கு வழங்கி வருகின்றன. தமிழ்நாடு அரசு வேளாண்மை சேவை மையங்களுக்காக வாங்கும் விவசாய கருவிகளுக்கு 50% மானியத்தினை கூட்டுறவு சங்கங்களுக்கு அளித்தது. இந்த மானியத்தின் உச்சவரம்பு ஒரு சங்கத்திற்கு ரூ.20/– இலட்சம் ஆகும். வேளாண் சேவை மையங்கள் 2016–17ஆம் ஆண்டில் ரூ.2.46 கோடி அளவிற்கு வருமானம் ஈட்டியுள்ளன.

**(iii) பொதுச் சேவை மையங்கள்**

அரசு மற்றும் இதர சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் சேவைகளை பொது மக்களுக்கு

வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாதிச் சான்று / வருமானச் சான்று / பிறப்பு / இறப்புச் சான்று / பட்டா / சிட்டா / ஈ.வே.ரா மணியம்மை நினைவு திருமண உதவி திட்டங்கள், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களின் திருமண உதவி திட்டம் இவற்றுடன் மின்கட்டணம் செலுத்துதல், காப்பீட்டு பிரிமியம் செலுத்துதல், அலைபேசி ரீசார்ஜ், டிஜிட்டல் புகைப்படம் எடுத்தல், மின்னணு பயணச் சீட்டு பதிவு செய்தல் போன்ற மின்னணு சேவைகளையும் இம்மையங்கள் வழங்கி வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களில் **4,469** பொதுச் சேவை மையங்கள் பல்வேறு மின்னணு சேவை வழங்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையங்களின் மூலம் **64,34,751** சேவைகளை கிராம மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வழங்கியுள்ளன. இதன் மூலம் **2016–2017** ஆம் ஆண்டில் ரூ.**20.81** கோடி வருவாயினை ஈட்டப்பட்டுள்ளது.

**(iv) ஊரகப் பகுதிகளில் கிடங்கு வசதியை விரிவுப்படுத்துதல்**

அறுவடைக் காலங்களில் விவசாயிகள் விளை பொருட்களை குறைந்த விலையில் விற்பனை செய்வதை



தடுத்திடும் நோக்குடன், கிராமப்புறங்களில் விளைப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதிகளை விரிவுப் படுத்துவதற்காக அரசு ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு நிதி உதவியுடன் **2011** முதல் **2014** வரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் **3,212** கிடங்குகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. இக்கிடங்குகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. **2014–15**ஆம் ஆண்டில், அரசு சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு நிதி திட்டத்தின்கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் **525** கிடங்குகளை கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இக்கிடங்குகள் கட்டுமான பணி பல்வேறு நிலைகளில் உள்ளன.

ஊரக கிடங்குகளை சேமிப்பு கிடங்கு வளர்ச்சி ஒழுங்குமுறை ஆணையத்திடம் பதிவு செய்வதன் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் தானிய ஈட்டுக்கடன் மற்றும் கிடங்கு செலாவணி பற்றுச்சீட்டு வழங்குதல் ஆகிய சலுகைகளை வழங்க இயலும். தமிழக அரசின் சிறப்பு நடவடிக்கை காரணமாக, சேமிப்பு கிடங்கு வளர்ச்சி ஒழுங்குமுறை ஆணையம், **250** மெட்ரிக் டன் மற்றும்

அதற்கு அதிகமான கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கு மட்டும் தரச்சான்று வழங்கி பதிவு செய்ய இயலும் என்ற நிபந்தனையினை தளர்த்தி, 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளுக்கும் தரச்சான்று வழங்கிட வகை செய்துள்ளது. இதுவரை 209 கிடங்குகள் சேமிப்பு கிடங்கு வளர்ச்சி ஒழுங்குமுறை ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2016–17ஆம் ஆண்டில், 376 விவசாயிகளுக்கு கிடங்கு செலாவணி பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு, 7 சதவிகித வட்டி விகிதத்தில் ரூ.715.91 இலட்சம் தானிய ஈட்டுக்கடன் இக்கிடங்குகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகள் 7 சதவிகித வட்டியில் தானிய ஈட்டுக்கடனை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

**2.6. கூட்டுறவுச் சங்கங்களின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல் 2016–17**

**(i) கூட்டுறவு நிறுவனங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்**

2016–17 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 103 கூட்டுறவு



நிறுவனங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் ரூ.27.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. கட்டுமான பணிகள் பல்வேறு மேம்பட்ட நிலைகளில் உள்ளன.

**(ii) கூட்டுறவு வங்கிகளின் புதிய கிளைகள் துவங்குதல்**

2016–17 ஆம் ஆண்டில் 4 மத்திய கூட்டுறவு வங்கிகளில் 9 புதிய கிளைகள் ரூ.2.25 கோடி செலவில் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டதில், 8 புதிய கிளைகள் திறக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கிளையில் பணிகள் விரைவில் முடிக்கப்பட உள்ளது.

**(iii) கூட்டுறவு வங்கிகளை நவீனமயமாக்குதல்**

கூட்டுறவு வங்கிகளின் சேவையை மேம்படுத்த ரூ.12.45 கோடி மதிப்பீட்டில் 79 கூட்டுறவு நிறுவனங்கள் நவீனமயமாக்கப்படும் என 2016–17 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இதன்படி 23 கூட்டுறவு நிறுவனங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சிய கூட்டுறவுச் சங்கங்களில் நவீனமயமாக்கல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(iv) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

**(அ) உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள்**

கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பினை வலுப்படுத்தும் நோக்குடன் **2012–13** ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகளின் **1,038** கிளைகளில், அதாவது தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் அனைத்து கிளைகளிலும், மத்திய கூட்டுறவு வங்கிகளின் அனைத்து கிளைகளிலும், நகரக்கூட்டுறவு வங்கிகளின் அனைத்து கிளைகளிலும் உட்சுற்று தொலைக்காட்சி நிழற்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் **1,975** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இதர கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் விரைவில் நிறுவப்பட உள்ளது.

ஆ) **பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பறை**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மீதான பொது மக்களின் நம்பிக்கையை



அதிகரிக்க போதிய அடிப்படைப் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்கள் தங்களுடைய பணம் மற்றும் ஈடாக வைத்துள்ள நகைகள் இச்சங்கங்களில் பாதுகாப்பாக உள்ளது என உணர வேண்டும்.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால், **2016–17** ஆம் ஆண்டில் **8** கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.**0.64** கோடி செலவில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பறை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டதில், **6** தொடக்க கூட்டுறவு வேளாண்மை கடன் சங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன. எஞ்சிய **2** தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் **2016–17**ஆம் ஆண்டில் **50** கூட்டுறவு நிறுவனங்களில் உயர்தர பாதுகாப்பு பெட்டகம் ரூ.**2.50** கோடி செலவிலும், **34** கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ.**1.02** கோடி செலவிலும் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டதில், உயர்தர பாதுகாப்பு பெட்டகம் **42** கூட்டுறவு நிறுவனங்களிலும், வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகம் **32** தொடக்க

வேளாண்மை கடன் சங்கங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. எஞ்சிய கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 3. நீண்டகாலக் கடன் அமைப்பு

நீண்டகாலக் கூட்டுறவுக் கடன் அமைப்பானது, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியினையும் வட்ட / வட்டார அளவில் செயல்படும் 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும். இக்கடன் நிறுவனங்கள், விவசாயிகள் /பொது மக்களின் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத நோக்கங்களுக்காக நீண்ட காலக் கடன்களையும் மற்றும் சிறு பாசனம், தோட்டக்கலை, மலைத்தோட்டப்பயிர்கள் மற்றும் இதர வேளாண்மை சார்ந்த தொழில்களுக்காக அதன் உறுப்பினர்களுக்கு முதலீட்டுக் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.



### 3.1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தனது சொந்த நிதியைக் கொண்டு, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்க நிதியுதவி அளித்து வருகிறது. இந்த வங்கியின் பங்கு மூலதனம் 31.03.2017 அன்று உள்ளபடி ரூ.40.37 கோடியாகவும், வைப்புகள் ரூ.175.72 கோடியாகவும் உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது கிளைகள் மூலம், 2016–17 ஆம் ஆண்டில் ரூ.233.78 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளது.

### 3.2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

180 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், சிறு பாசனம், நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் பண்ணை சார்ந்த இதர பணிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வந்தன. தேசிய

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப் பெறாத நிலையில், இவ்வங்கிகளிடம் உள்ள நிதியிலிருந்து நகைக்கடன்கள் வழங்கி வருகின்றன. **2016–17** ஆம் ஆண்டில், இவ்வங்கிகள் **ரூ.884.83** கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளன.

### 3.3. ஒருமுறை கடன் தீர்வுத் திட்டம் 2014

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் வசூலை அதிகரிக்கும் நோக்குடன் **31.03.2014** அன்று நிலுவையிலிருந்த பண்ணை சாராக் கடன்களுக்காக ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம் **2014–ல்** அரசால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம், கடைசியாக **30.09.2017** வரை நீட்டித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், **31.05.2017** வரை **2,640** விவசாயிகள் **ரூ.56.65** கோடி கடன் தொகையினை திரும்பச் செலுத்தி, **ரூ.53.98** கோடி வட்டி தள்ளுபடியாக பெற்று பயனடைந்துள்ளனர்.



## 4. நகர கூட்டுறவுக் கடன் அமைப்பு

நகர கூட்டுறவுக் கடன் அமைப்பானது நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கியதாகும். இந்நிறுவனங்கள் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் நடுத்தர வருவாய் பிரிவினரின் வங்கியியல் மற்றும் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. நாளது தேதியில் மாநிலத்தில் **128** நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் **97** நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 4.1. நகரக் கூட்டுறவு வங்கிகள்

தமிழ்நாட்டில் **128** நகரக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. நகரக் கூட்டுறவு வங்கிகள், நகரங்கள் மற்றும் புற நகர்களில் வசிக்கும் மக்களுக்கு வங்கியியல் சேவை மற்றும் கடன் வழங்கும் பணியினைச் செய்து வருகின்றன. இவ்வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் பண்ணை சாராக் கடன்களை வழங்கி

வருகின்றன. 2016–17ம் ஆண்டில், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.5,391.72 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. 31.03.2016 தேதியில் ரூ.8,244.76 கோடியாக இருந்த இவ்வங்கிகளின் வைப்புத் தொகை 31.03.2017 தேதியில் ரூ.8,444.31 கோடியாக உயர்ந்துள்ளது. 2016–17 ஆம் ஆண்டில் நகர கூட்டுறவு வங்கிகளால் சிறு வணிகர்களைக் கொண்ட 1,617 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் நகர்புறங்களில் உருவாக்கப்பட்டு ரூ.59.91 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறு வணிகர்கள், தனியார் கடன் வழங்குபவர்களிடம் அதிகளவிலான வட்டி கொடுப்பதைத் தவிர்க்க இவ்வங்கிகள் உதவி புரிந்துள்ளன. இவ்வாறான கடன்கள் 2017– 18ம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.

மேலும், நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த மாநில அரசு, இந்திய ரிசர்வ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத் திட்டுள்ளது. இதன்படி, நகர கூட்டுறவு வங்கிகளின் செயல்படும் திறனை அதிகரித்து பொது மக்களுக்கு மேம்பட்ட சேவை அளிக்கும் விதமாக அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகளின் தலைமையகம் மற்றும்



கிளைகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகளிலும் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவையினை அமல்படுத்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 4.2. நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரங்கள் மற்றும் புற நகர்களில் வசிக்கும் மக்களுக்கு கடன் வழங்கும் பணியினை செய்து வருகின்றன. நாளது தேதியில் மாநிலத்தில் 97 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் பண்ணை சாராக் கடன்கள் ஆகிய கடன்களை வழங்கி வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் ரூ.1,100.94 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. 31.03.2016 தேதியில் ரூ.1,164.89 கோடியாக இருந்த இச்சங்கங்களின் வைப்புத் தொகை 31.03.2017 தேதியில்

ரூ.1,412.12 கோடியாக உயர்ந்துள்ளது. **2016–17**ம் ஆண்டில் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் சிறு வணிகர்களைக் கொண்ட 227 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் நகர்புறங்களில் அமைக்கப்பட்டு ரூ.**4.83** கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள்

மாநிலத்தில் மொத்தம் **1,769** பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மத்திய மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், உறுப்பினர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. இச்சங்கங்கள் **31.03.2017** தேதியில் ரூ.**1,929.95** கோடி பங்குத் தொகையுடனும், நடைமுறை மூலதனமாக ரூ.**11,563.72** கோடியுடனும், உறுப்பினர்களுக்கு **2016–17**ம் ஆண்டில் ரூ.**5,818.09** கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியும் செயல்பட்டு வருகின்றன.



## 6. வேளாண்மைக் கடன் தள்ளுபடித் திட்டம் – 2016

தமிழ்நாடு அரசு, கூட்டுறவு நிறுவனங்களில் **31.03.2016**ல் நிலுவையிலிருந்த சிறு மற்றும் குறு விவசாயிகளின் பயிர்க்கடன், மத்தியக் கால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் ஆகியவற்றை தள்ளுபடி செய்துள்ளது. தள்ளுபடிக்கு தகுதியான விவசாயிகளின் பட்டியல் கள அளவில் அலுவலர்களால் சரிபார்க்கப்பட்டு இணையத்தளத்தில் (www.tncu.tn.gov.in) **01.09.2016** அன்று வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் **12,02,075** விவசாயிகள் ரூ.**5,318.73** கோடி அளவிற்கு தள்ளுபடி பெற்று பயன்பெற்றுள்ளனர்.

வேளாண்மை கடன் தள்ளுபடி தொகையை ஐந்தாண்டு சம தவணைகளில் **2016–17** முதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதுவரை அரசு, கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கிய வேளாண் கடன் தள்ளுபடியை ஈடுசெய்ய ரூ.**1,794.66** கோடியை ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 7. பண மதிப்பு நீக்க நடவடிக்கையினால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகள்

புழக்கத்தில் இருந்த 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுகள், சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவிப்பால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வங்கியியல் ஒழுங்குமுறை சட்டம் 1949–ன்படி வங்கிகள் என்ற வரையறையில் இல்லாததால் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க இயலவில்லை. இருப்பினும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் பெறும் விவசாயிகளின் பெயரில் அருகிலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி கிளையில் கணக்கு துவங்கி, விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தொடர்ச்சியாக வழங்கப்படுவதற்கு அரசு வழிவகை செய்தது. இந்நடவடிக்கையின் காரணமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடர்ந்து கடன் அனுமதித்து மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் மூலமாக கடன் தொகை வழங்கப்பட்டது. 23.11.2016 முதல் 31.03.2017 வரை, 3,98,062 விவசாயிகள் மத்திய கூட்டுறவு வங்கிகளில் கணக்கு துவங்கியதில் 3,48,323 விவசாயிகள் ரூ.1,640.79 கோடி பயிர்க்கடன் பெற்றுள்ளனர்.



# இயல்–II

# கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

## 1. முன்னுரை

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்கச் செய்வதையும், சந்தை விலையினை நிலைப்படுத்து வதையும் இரட்டை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் / நுகர்வோர்களுக்கிடையே ஓர் நேரடி இணைப்பினை ஏற்படுத்தி விவசாய விளைபொருட்களை விற்பதற்கும் / வாங்குவதற்கும் சந்தை வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

இவற்றுடன், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைக்கும் வரை அவர்களுடைய விவசாய விளைபொருட்களை ஈடாகப் பெற்று தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. சில சங்கங்கள்

பல்வேறு வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்துதல் மூலம் அவற்றின் மதிப்பைக் கூட்டி வருகின்றன.

இச்சங்கங்கள், விவசாய இடுபொருட்களை விநியோகித்தல், நியாய விலைக்கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்தல் மற்றும் நியாய விலைக்கடைகளை நடத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

**1.2** மாநிலத்தில் **112** வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தை (TANFED) தலைமை நிறுவனமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை உள்ளடக்கிய மண்டல இணையமாக செயல்பட்டு, அப்பகுதிகளில் உள்ள விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு



உட்பட்ட விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

## 2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், **20.02.1959**–இல் தனது வியாபார நடவடிக்கையைத் தொடங்கியது. இவ்விணையம் மாநிலத்தின் ஒருங்கிணைப்பு முகவராக செயல்பட்டு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உரம் மற்றும் விவசாய இடுபொருட்களை விநியோகம் செய்து வருகிறது. **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**392.14** கோடி மதிப்பிலான **2,96,439** மெ.டன் உரங்கள் மற்றும் ரூ.**3.03** கோடி மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகளை தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் விநியோகம் செய்துள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் ரூ.**64.14** கோடி மதிப்பிலான வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.

திருவாரூர் மாவட்டத்தில் பாமணி என்ற இடத்தில் உரக்கலவை ஆலை ஒன்றும் **1970–**ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு இணையத்தால் தொடங்கப்பட்டு பாமணி **17:17:17** என்ற வணிக முத்திரையிடப்பட்ட உரக்கலவையினை உற்பத்தி செய்து வருகிறது. **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**13.48** கோடி மதிப்பிலான **7248** மெ.டன் கலப்பு உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**2.2.** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில், உரங்களை விநியோகிக்க, **2016–17** ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு ரூ.**135.00** கோடி வழிவகை முன்பணமாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வழங்கியுள்ளது.

**2.3.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், **29,890** மெ.டன் கொள்ளளவு கொண்ட **41** கிடங்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் கோயம்பேடு மொத்த விற்பனைச் சந்தை வளாகம் மற்றும் பேசின் பிரிட்ஜ் ஆகிய இடங்களில் முறையே **2500** மெ.டன் மற்றும் **960** மெ.டன் கொள்ளளவு கொண்ட **2** குளிர்பதனக் கிடங்குகளையும் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு



கூட்டுறவு விற்பனை இணையம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து கூட்டு நடவடிக்கைகளின் மூலம் விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களைச் சந்தைப்படுத்தி வருவதுடன், மாநில முகமையாக செயல்பட்டு ஆதரவு விலைத்திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது.

**2.4. 2016** ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் ஆதரவு விலைத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) முகமையாக செயல்பட்டு கொப்பரைக் கொள்முதல் பணியினை ஒருங்கிணைத்து மேற்கொண்டது. ரூ.**696.76** இலட்சம் மதிப்பிலான **1171** மெ.டன் கொப்பரையினை, **942** விவசாயிகளிடமிருந்து, கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் **20** மாவட்டங்களில் திறக்கப்பட்ட **46** கொப்பரைக் கொள்முதல் மையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**2.5.** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகிப்பதற்காக ஆவின் நிறுவனத்திற்கு மாட்டுத் தீவனத்தையும் விநியோகம் செய்து வருகிறது. **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**55.10** கோடி மதிப்புள்ள **29766.400** மெ.டன் அளவிலான மாட்டுத்தீவனத்தை இணையம் ஆவின் நிறுவனத்திற்கு விற்பனை செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து கோயம்பேடு வணிக வளாகம் மற்றும் கோடம்பாக்கத்தில் பெட்ரோல் / டீசல் விற்பனை நிலையத்தையும் நடத்தி வருகிறது.

### 3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)

**29.01.1941**–இல் ஆரம்பிக்கப்பட்ட தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள **12** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல இணையமாக செயல்பட்டு வருகின்றது. இவ்விணையம், உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை விநியோகம் செய்து வருகின்றது. இவ்விணையத்திற்கு



சொந்தமாக **8400** மெ.டன் கொள்ளவு கொண்ட **8** கிடங்குகள் உள்ளன. இந்நிறுவனம் **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**26.49** கோடி மதிப்பிலான **36,219** மெ.டன் உரங்கள், **501** கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்துள்ளது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் அச்சகம் ஒன்றை நடத்தி வருவதுடன் நகைக்கடனும் வழங்கி வருகிறது. இவ்விணையம் **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**66.05** கோடி அளவிற்கு புரள் வணிகம் செய்துள்ளது.

### 4. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

**08.12.1935** இல் ஆரம்பிக்கப்பட்ட நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளை செயல் எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகளின் விளைபொருட்களான உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், கேரட், பீட்ரூட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதை தனது முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருவதோடு

விவசாயப் பெருமக்களுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்குதல் பணியினையும் செய்து வருகிறது. மேட்டுப்பாளையத்தில் இச்சங்கத்திற்கென உரக்கலவை அலகு ஒன்று உள்ளது. இச்சங்கம் சமையல் எரிவாயு முகவராகவும் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் 2016–17 ஆம் ஆண்டில் ரூ.4.19 கோடி அளவிற்கு உத்தேச இலாபத்தை ஈட்டியுள்ளது.

## 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு சரியான விலை கிடைக்கச் செய்வதையும், சந்தை விலையினை நிலைப்படுத்து வதையும் இரட்டை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இவை உரம் மற்றும் வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு விநியோகிப்பதை முதன்மை பணியாக செய்து வருகின்றன. மேலும், இச்சங்கங்கள் தமிழ்நாடு வாணிபக்கழகக் கிடங்கிலிருந்து



நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் பணியை மேற்கொள்வதோடு நியாய விலைக்கடைகளையும் நடத்தி வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் புரள் வணிகம் ரூ.2183.07 கோடியாகும்.

### 5.1. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

### (i) வேளாண் விளைபொருள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக ஏலக்களங்கள், உலர்களங்கள் மற்றும் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தி, அதன் மூலம் விவசாயிகள் தங்களது பொருட்களை ஆதாயமான விலைக்கு விற்பனை செய்ய உதவுகின்றன. சங்கம், அன்றைய தினமே உடனடியாக தொகையை விவசாயிக்கு அளித்து விட்டு பின்னர் வியாபாரிகளிடமிருந்து தொகையை வசூல் செய்கிறது. 2016–17 ஆம் ஆண்டில் ரூ.886.91 கோடி அளவிலான வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டு, அவர்களின் விளைபொருட்கள் இலாபகரமான விலைக்கு விற்பனை செய்யப்படுவதோடு, அவர்கள் பெற்ற கடனுக்குரிய தொகைக்கு வரவு வைக்கப்பட்டு எஞ்சியத் தொகை விவசாயிகளுக்கு அளிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வழங்கும் கடன்கள் வசூல் செய்யப்படுவது உறுதி செய்யப்படுகிறது. **2016–17** ஆம் ஆண்டில் விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம் ரூ.**2.99** கோடி அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(iii) தானிய ஈட்டுக்கடன்**

அறுவடைக்காலத்தில், சந்தை விலை குறையும் போது, விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தடுத்து, அவர்களின் அவசர பணத் தேவைகளை பூர்த்தி செய்திட வேளாண்மை



உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக்கடன்களை வழங்கி வருகின்றன. உறுப்பினர்கள் தங்களது விளை பொருட்களைக் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளில் பாதுகாப்பாக வைத்திருந்து, ஆதாயமான சந்தை விலை கிடைக்கும் போது அவற்றை விற்பனை செய்ய இயலும். விளைபொருட்களின் சந்தை மதிப்பில் **80** சதவிகிதம் வரை தானிய ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது. **2016–17** ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.**99.88** கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்களை வழங்கியுள்ளன.

**(iv) நகைக்கடன் வழங்குதல்**

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்களின் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு மற்றும் உடனடி பொருளாதார தேவைகளுக்காக நகைக்கடன் வழங்கி வருகின்றன. **2016–17** ஆம் ஆண்டில் ரூ.**304.32** கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(V) வேளாண் இடுபொருள்கள் விநியோகம்**

விவசாயிகளின் நலனுக்காக உரம், விதைகள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**(V) (அ) தரமான விதைகள் விற்பனை**

வேளாண் விளைப் பொருட்களின் தரத்தினை உறுதி செய்திட கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள் மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளை கொள்முதல் செய்து நியாயமான விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன. 2016–17ஆம் ஆண்டில், ரூ.7.17 கோடி மதிப்பிற்கு விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(V) (ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம்.**

வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்திட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்



விவசாயிகளுக்கு உரங்களை விற்பனை செய்வதுடன், பயிர்க்கடனில் ஒரு பகுதியாக உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனை முகவர்களாக செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் 2016–17ஆம் ஆண்டில், ரூ.437.37 கோடி மதிப்பிலான 3,47,693 மெட்ரிக் டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**5.2 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள்**

**(i) ஆதரவு விலைத் திட்டத்தின் கீழ் கொப்பரைக் கொள்முதல்**

வெளிச்சந்தையில் கொப்பரையின் விலை குறைந்ததையடுத்து, 10.06.2016 அன்று, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தென்னை பயிரிடும் விவசாயிகள் பயனுறும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலைத்திட்டத்தின் கீழ் கொப்பரைக் கொள்முதல்

செய்திட ஆணையிடப்பட்டது. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.59.50 எனவும் பந்துக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.62.40 எனவும் கொள்முதல் செய்திட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஒருங்கிணைப்பு முகவராக நியமனம் செய்யப்பட்டது. கொப்பரைக் கொள்முதலுக்கு வேளாண் உற்பத்தியாளர் சந்தைக்குழு வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டது. 20 மாவட்டங்களில் 46 கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டு, 15.06.2016 முதல் 30.11.2016 வரை 942 விவசாயிகளிடமிருந்து ரூ.696.76 இலட்சம் மதிப்பிலான 1171.000 மெ.டன் கொப்பரைக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**(ii) சூரிய சக்தி கொப்பரை உலர்களன்கள் அமைத்தல்**

தேங்காய்களை பதப்படுத்தி, மதிப்புக் கூட்டி நல்ல விலையினை தென்னை பயிரிடும் விவசாயிகள் பெறும்



பொருட்டு சந்தைப்படுத்த உபரியாக உள்ள 10 மாவட்டங்களில் 28 சூரிய சக்தி கொப்பரை உலர்களங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலகுகள் சூரிய சக்தியை பயன்படுத்தி குறைந்த செலவில் இயற்கையான முறையில் தேங்காயை கொப்பரையாக மாற்றம் செய்கின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 8,85,060 தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

**(iii) கணினி எடைமேடை நிறுவுதல்**

அதிக அளவிலான வேளாண் விளைபொருட்களை துரிதமாகவும், துல்லியமாகவும் எடையிட ஏதுவாக பெருந்துறை, பவானி, உசிலம்பட்டி, நீலகிரி, துறையூர் மற்றும் பரமக்குடி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன.

கிருஷ்ணகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.22.00 இலட்சம் மதிப்பில் கணினி எடைமேடை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

**(iv) விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்.**

துடியலூார் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க, ரூ.19.13 இலட்சம் மதிப்பில் விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. 2016–17ஆம் ஆண்டில், 766.214 மெட்ரிக் டன் அளவிற்கு விதைகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

**(v) வேளாண் விளை பொருட்களை பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினைக் கூட்டுதல்**

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பஞ்சு அரவை அலகுகள், பயிறு உலர வைக்கும் அலகுகள், மிளகாய், மஞ்சள் மற்றும் குங்குமம் அரவை அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள், அரிசி ஆலைகள், பருத்தி பொதி அழுத்தும் அலகுகள் ஆகிய பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இப்பதனிடும் அலகுகள் வேளாண் பொருட்களின் மதிப்பைக் கூட்டி உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க வழிவகை செய்து வருகின்றன. தனி நபர் விவசாயிகளுக்கு பதனிடும் வசதியினை குறைந்த விலையில் இவ்வலகுகள் வழங்கி வருகின்றன.



2014–2015 ஆம் ஆண்டில் துவரை, மிளகாய், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் எள் ஆகிய வேளாண் பொருட்களின் மதிப்பினைக் கூட்டிட முறையே பேரையூர், திருமங்கலம், சிதம்பரம், திருச்செங்கோடு மற்றும் பெருந்துறை ஆகிய ஐந்து இடங்களில் ரூ.91.35 இலட்சம் மதிப்பில் பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. 2016–17ஆம் ஆண்டில், இவ்வலகுகள் மூலம் 4790.985 மெட்ரிக் டன் அளவிற்கு வேளாண் விளை பொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

2015–2016 ஆம் ஆண்டில் துவரை பதனிடும் அலகு, பஞ்சு பொதி அழுத்தும் அலகு, கடலை உடைக்கும் அலகு மற்றும் விதை சுத்திகரிப்பு அலகுகள் முறையே ஒரத்தநாடு, கோவில்பட்டி, புதூர், செங்கம் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் ரூ.33.32 இலட்சம் மதிப்பில் 5 பதனிடும் அலகுகள் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளன. 2016–17ஆம் ஆண்டில், இவ்வலகுகள் மூலம் 23 மெட்ரிக் டன் அளவிற்கு வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

2015–16 ஆம் ஆண்டில் காப்பி, மிளகு, சாமை, வரகு மற்றும் புளி பதனிடும் அலகுகள் முறையே

கொல்லிமலை, சித்தேரி, வெள்ளிமலை, ஏலகிரி, கிளாக்காடு மற்றும் நம்மியம்பட்டு ஆகிய பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.27.72 இலட்சம் மதிப்பில் 6 பதனிடும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இப்பதனிடும் அலகுகளில் 2016–17 ஆம் ஆண்டில் 118.031 மெ.டன் அளவிற்கு மேற்படி வேளாண் விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன.

**(vi) உரக் கலவை இயந்திரம் நிறுவுதல்.**

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 2008 ஆம் ஆண்டு முதல் உரக் கலவை உற்பத்தி செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இதன் உற்பத்தி மற்றும் அளவினை அதிகரித்திட நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையில் ரூ.15.00 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய உரக் கலவை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. 2016–17ஆம் ஆண்டில் 10196.500 மெட்ரிக் டன் அளவிலான உரக் கலவை உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.13.32 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



**(vii) உலர்களங்கள் அமைத்தல்**

கடந்த இரண்டு வருடங்களில் ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி, திருமங்கலம், பென்னாகரம் மற்றும் கமுதி ஆகிய 6 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.33.45 இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வுலர் களன்கள் வேளாண் பெருமக்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து ஆதாய விலையில் விற்பதற்கு உதவி புரிந்து வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.77.90 இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**(viii) வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு வாகனங்கள் கொள்முதல் செய்தல்.**

வேளாண் விளைபொருட்களை இலகுவாக விநியோகம் செய்திட திருச்செங்கோடு மற்றும் கிருஷ்ணகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு தலா ஒரு வாகனம் வீதம் மொத்தம் **ரூ.24.62** இலட்சம் மதிப்பில் வாகனங்கள் வாங்கப்பட்டன.

**(ix) சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகு அமைத்தல்**

மின்சார செலவினை குறைக்கும் பொருட்டு, திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகு **ரூ.20.00** இலட்சம் மதிப்பில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**(x) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் புதிய அலுவலகக் கட்டடங்கள் திருவண்ணாமலை, செங்கம், போளூர்,



திருமங்கலம், பேரையூர், வாடிப்பட்டி, காரமடை, மேட்டுப்பாளையம் மற்றும் தேனி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு மொத்தம் ரூ.2.47 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. உறுப்பினர்களின் அடமான நகைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு கடந்த மூன்றாண்டுகளில் ரூ.2.47 கோடி மதிப்பில் 40 பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2015–2016 ஆம் ஆண்டில், திருமங்கலம், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, பேரையூர் மற்றும் மேலூர் ஆகிய சங்கங்களின் அசையா சொத்துக்களின் பாதுகாப்பிற்காக, ரூ.75.50 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் விளைபொருட்களின் ஏல விற்பனையை துரிதமாகவும், வெளிப்படையாகவும் மேற்கொள்ளும் பொருட்டு, ஈரோடு, பெருந்துறை, திருச்செங்கோடு, சேலம் மற்றும் ஆத்தூர் ஆகிய சங்கங்களில் ஏல நடைமுறை செயல்பாடுகள் ரூ.43.35 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

**(xi) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கிடங்கு வசதி**

அரசின் நடவடிக்கை காரணமாக 2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் சேமிப்புக் கிடங்கு உட்கட்டமைப்பு நிதி மூலமாக 102 கிடங்குகள் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கட்டப்பட்டு அவை பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. சேமிப்புக் கிடங்கு உட்கட்டமைப்பு நிதி மூலமாக 2014–2015 ஆம் ஆண்டில் 37 கிடங்குகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. அக்கிடங்குகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலையில் உள்ளன.

## 6. தேசிய விருதுகள்

இம்மாநிலத்தின் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டு, சிறந்த திட்டம் மற்றும் செயல்பாட்டிற்காக வெகுவாக பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன. பின்வரும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அவற்றின் சிறப்பான செயல்பாட்டிற்காக ‘‘சிறந்த கூட்டுறவு விற்பனைச் சங்கம்’’ என்னும்



விருதினை இந்திய தேசியக் கூட்டுறவு ஒன்றியத்திடமிருந்து **25.06.2013** அன்று பெற்றன:–

1. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்.
2. பொள்ளாச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
3. பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.
4. உடுமலைப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், மே 2015–இல் ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசிய நறுமணப் பொருட்கள் கண்காட்சியில் கலந்து கொண்டு சிறப்பான செயல்பாட்டிற்காக தேசிய அளவில் 2–வது பரிசினைப் பெற்றது. மேலும், இச்சங்கம் ஏப்ரல் 2016–இல் ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசிய கூட்டுறவு நறுமணப் பொருட்கள் கண்காட்சியில் மஞ்சள், மஞ்சள்தூள், குங்குமம், மல்லித்தூள் மற்றும் மிளகாய்த்தூள் ஆகியவற்றை காட்சிப்படுத்துதல் மற்றும் விற்பனைக்காக தேசிய அளவில் முதல் பரிசினைப் பெற்றுள்ளது.

# இயல்–III

# நுகர்வோர் கூட்டுறவுகள்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுகள் மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 34 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், மூன்றாம் நிலையில் 370 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளையும் உள்ளடக்கிய மூன்றடுக்கு அமைப்பாக செயல்பட்டு வருகின்றது. நுகர்வோர் கூட்டுறவுகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டு, விலை உயர்வை கட்டுப்படுத்துவதில் உதவி புரிகின்றன.

## 2. நடவடிக்கைகள்

**2.1.** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதம



கூட்டுறவு பண்டகசாலைகளின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு இணைப்புச் சங்கங்களுக்குத் தேவையான அத்தியாவசிய நுகர்பொருட்களை கொள்முதல் செய்யும் ஒரு ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகின்றது.

**2.2.** கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால் 17 பல்பொருள் அங்காடிகள், 60 சுயசேவைப்பிரிவுகள், 48 சிறு பல்பொருள் அங்காடிகள், 61 சில்லரை விற்பனை நிலையங்கள், 53 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 87 கூட்டுறவு மருந்தகங்கள், 28 அம்மா மருந்தகங்கள், 6 பெட்ரோல் வழங்கும் நிலையங்கள், 30 சமையல் எரிவாயு வழங்கும் நிலையங்கள், 82 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் மற்றும் 3,203 நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து, அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்வதன் மூலம், பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதில், பெரும்பங்காற்றி வருகின்றன.

**2.3.** பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும், 26 கூட்டுறவு மருந்தகங்கள், 28 அம்மா மருந்தகங்கள், 14 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 3 பெட்ரோல் வழங்கு நிலையங்கள் மற்றும் 2269 நியாயவிலைக் கடைகளை மாநிலம் முழுதும் நடத்தி வருகின்றன.

## 3. செயல்பாடுகள்

தரமான நுகர்பொருட்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், உற்பத்தி மையங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து நியாயமான விலையில் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன. பெரும்பாலான தரமான நுகர்பொருட்கள், கூட்டுக் கொள்முதல் குழுக்கள் மூலமாக, உரிய நடைமுறைகளை பின்பற்றி, மொத்தமாக கொள்முதல் செய்யப்படுகின்றன. இவை, நுகர்வோர் கூட்டுறவுகளால் நிர்வகிக்கப்படும் விற்பனை நிலையங்களில் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

2016–2017 ஆம் ஆண்டில், அனைத்து கூட்டுறவு சங்கங்களின் வழியாக ரூ.3111.78 கோடி மதிப்பிற்கு,



கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 4. சந்தை குறுக்கீட்டு நடவடிக்கைகள்

வெளிச்சந்தையில், அத்தியாவசியப் பொருட்களான துவரம்பருப்பு, உளுந்தம்பருப்பு, மிளகாய், புளி, நல்லெண்ணை, வெங்காயம் போன்றவற்றின் விலை திடீரென உயரும் போது, சந்தை குறுக்கீட்டு நடவடிக்கை மூலமாக, அவை கிடைக்கும் இடங்களிலிருந்து, குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம், வெளிச்சந்தை விலையைவிட, குறைவான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

### 4.1. அம்மா மருந்தகங்கள்

2014–15 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், ‘‘ஒரு முன்முயற்சியாக ஏற்கெனவே கூட்டுறவு துறையால் நடத்தப்படும் மருந்தகங்களுடன் கூடுதலாக 100 அம்மா மருந்தகங்கள் புதியதாகத் தொடங்கப்படும்’’, என அறிவிக்கப்பட்டது. இதன்படி

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் **26.06.2014** அன்று **10** அம்மா மருந்தகங்கள் துவக்கப்பட்டன. நாளது தேதியில் **111** அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டு **32** மாவட்டங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மருந்தகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, தலா ரூ.**10.00** லட்சம் வீதம், ரூ.**10.00** கோடியை தமிழக அரசு, நடைமுறை மூலதனமாக, விலை கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து வழங்கியுள்ளது. இம்மருந்தகங்கள் நுகர்வோருக்கு **15%** தள்ளுபடி விலையில் மருந்துகளை வழங்கி வருகின்றன. **2016–17** ஆம் ஆண்டில் கூட்டுறவு மற்றும் அம்மா மருந்தகங்கள் மூலம் ரூ.**152.92** கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**4.2. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்**

சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, நகர்ப்புற பகுதிகளில், தரமான காய்கறிகளை நியாமான விலையில் வழங்க ஏதுவாக, கூட்டுறவுகள் மூலம் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டன. பசுமையான காய்கறிகள், விவசாயிகளின் விளை நிலங்களிலிருந்து,



உடனுக்குடன் தொகை செலுத்தி நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்பொழுது மாநிலம் முழுவதும், **2** நகரும் கடைகள் உட்பட **74** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் **32** வகையான தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சீரான விநியோகத்திற்கென, **5** வாகனங்கள் ரூ.**70.00** இலட்சம் மதிப்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டன. காய்கறிகள் அனைத்தும் பசுமையாக (Fresh) வைத்திட இவ்வாகனங்களில் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட தேவையான அனைத்து வசதிகளும் ரூ.**36.00** இலட்சம் மதிப்பில் செய்யப்பட்டுள்ளன. செட்டிப்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், பழனி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவற்றிற்கு, தலா ஒரு வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, காய்கறிகள் அவை விளையும் கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்ட

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு நகர்வு செய்யப்படுகின்றன. 2 வாகனங்கள் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை நகரும் பண்ணைப் பசுமை கடைகளாக செயல்படுகின்றன.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளுக்கு, நடைமுறை மூலதன நிதியாக ரூ.8.34 கோடி, விலை கட்டுப்படுத்தும் நிதியிலிருந்து அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் உட்கட்டமைப்பு வசதி மற்றும் தோற்றப் பொலிவினை மேம்படுத்த, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.1.50 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில், 20.06.2013 முதல் 31.05.2017 வரை 24,873 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.69.56 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



**4.3.** சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், அதிக அளவில் பெய்த பருவமழை பாதிப்பால் காய்கறிகளின் வரத்து குறைந்து, வெளிச்சந்தையில் அவற்றின் விலை உயர்ந்தது. இவ்விலை உயர்வினை கட்டுப்படுத்திட, கூடுதலாக 50 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (39 கூட்டுறவு விற்பனை மையங்கள் + 11 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக விற்பனை மையங்கள்) 18.11.2015–இல் சென்னை நகரில் தற்காலிகமாக திறக்கப்பட்டன. கூடுதலாக, 11 நகரும் கடைகள் மூலம், 32 விற்பனை மையங்களில் கூட்டுறவுகளால் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. மேற்காண் விற்பனை மையங்களுடன் மேலும் 536 நியாவிலைக்கடைகளில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் தற்காலிக அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டது. இம்முயற்சி திடீர் விலை உயர்வினைக் கட்டுக்குள் கொணர்வதில் பெரிதும் உதவியது. தொடர் மழைக்காலத்தில், கூடுதலாக தொடங்கப்பட்ட பண்ணைப் பசுமை நுகர்வோர் காய்கறி கடைகள், நகரும் கடைகள் மற்றும் நியாவிலைக்கடைகளில் 18.11.2015 முதல் 31.12.2015

வரை ரூ. 70.57 இலட்சம் மதிப்பிலான 261.182 மெட்ரிக் டன் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**4.4. "ஒரு கிலோ அரிசி ரூ.20/–" திட்டம்**

வெளிச்சந்தையில் அரிசி விலை உயர்வதைக் கட்டுப்படுத்தும் விதமாக ஒரு கிலோ அரிசி ரூ.20/–க்கு விற்பனை செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் 273 விற்பனை மையங்கள் மூலம் ரூ.15.55 கோடி மதிப்பிலான 7,775 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**4.5. இதர சந்தைக்குறுக்கீட்டு நடவடிக்கைகள்**

**(i)** வெளிச்சந்தையில் பருப்பு வகைகளின் விலையைக் கட்டுக்குள் வைத்திட சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து (National Consumers Cooperative Federation), துவரம்பருப்பு மற்றும் உளுந்தம்பருப்பினை கொள்முதல் செய்து, சென்னையில் 20 கூட்டுறவு விற்பனை மையங்கள் மற்றும் தமிழ்நாடு



நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 5 விற்பனை மையங்கள் வாயிலாக, குறைந்த விலையில் விற்பனை செய்தது. இந்நடவடிக்கையின் கீழ் துவரம்பருப்பு ஒரு கிலோ ரூ.107/–, உளுந்தம்பருப்பு ஒரு கிலோ A - ரகம் ரூ.112/– வீதமும் மற்றும் B - ரகம் ரூ.99/– வீதமும், 47,097கிலோ துவரம்பருப்பு மற்றும் 25,731 கிலோ உளுந்தம்பருப்பு விற்பனை செய்யப்பட்டது.

**(ii)** வெளிச்சந்தையில் துவரம்பருப்பின் விலை கிலோ 1–க்கு ரூ.180 வரையிலும் உயர்ந்து காணப்பட்டபோது, இறக்குமதி செய்யப்பட்ட துவரை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் உலோகம் மற்றும் கனிம வர்த்தக (MMTC) நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, துவரம்பருப்பாக மாற்றப்பட்டு, சென்னை, மதுரை, கோயம்புத்துார் மற்றும் திருச்சிராப்பள்ளியில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்களின் 71 விற்பனை மையங்கள் மூலம், 01.11.2015 முதல் ஒரு கிலோ ரூ.110/– விலையில், 323 மெ.டன் துவரம்பருப்பு நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டது.

**(iii)** சமீபத்தில் விலை உயர்வினை கட்டுப்படுத்தும் மற்றுமொரு சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக மத்திய

அரசின் ஒதுக்கீட்டில் இருந்து 96.52 மெட்ரிக் டன் துவரம் பருப்பு தமிழகம் முழுவதும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் விற்பனை மையங்கள் மூலம் 24.08.2016 முதல் 31.03.2017 வரை நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



## இயல்–IV

# சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

பல கைகள் இணைந்து பொதுவான நோக்கத்தை அடையக்கூடிய எந்த ஒரு செயல்பாட்டிலும் , அதன் அனைத்து நிலைகளிலும் கூட்டுறவு இயக்கமானது உண்மையாக தன்னை உட்புகுத்திக்கொண்டேயுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு கடன், கூட்டுறவு விற்பனை மற்றும் நுகர்வோர் கூட்டுறவு ஆகிய முதன்மையான செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பினும், தொழில் ஒப்பந்தம் மற்றும் கூட்டுறவு அச்சகம் போன்ற சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு சங்கங்கள் போன்ற புதிய முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் நேரடி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள சில கூட்டுறவு நிறுவனங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### (i) பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)

பழங்குடியின மக்கள் மற்றும் மலைவாழ் மக்களின் நன்மைக்காகவும், வேளாண் உற்பத்தியை மேம்படுத்துவதற்காகவும் கடன் வழங்குதல் மற்றும் விவசாய இடுபொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்ட பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அத்தியாவசிய பொருட்களை நியாய விலைக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூலமாக வழங்கி வருவதுடன், இச்சங்கங்கள் விவசாய விளைபொருட்கள் மற்றும் பழங்குடியின மக்களின் சிறுவனப்பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு உதவி வருகின்றன.

மாநிலத்தில் தற்போது **22** பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் **1,06,916** பழங்குடியினரும், **11,493** பழங்குடியினர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். **2016–17** ஆம் ஆண்டில் இச்சங்கங்களின் புரள் வணிகம் ரூ.**92.26** கோடி ஆகும்.



மலைவாழ் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்தவும் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு சந்தையை ஏற்படுத்திடவும், அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொதுவான வணிக முத்திரையுடன் சாமை, வரகு, தேன் மற்றும் புளி ஆகிய பொருட்களின் விற்பனைத்திட்டம் **20.06.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டது. இம்முயற்சியின் மூலம் **31.03.2017** முடிய ரூ.**98.82** இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஜவ்வாதுமலை மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில், சாமையினை பதப்படுத்தவும் மதிப்பு கூட்டவும் சாமை பதனிடும் அலகு ரூ.**1.50** இலட்சம் மதிப்பில் **2013** ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

### (ii) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS)

கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் அமைந்துள்ள துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதுடன் தனது சொந்த தயாரிப்பு உரங்கள், பூச்சி

மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகத்திலும் ஈடுபட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனம் பயிர்க் கடன், அடமானக் கடன் மற்றும் நகைக் கடன், போன்ற கடன்களை உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கென வழங்கி வருகிறது. 2016–17ஆம் ஆண்டில் ரூ.1.70 கோடி மதிப்பிலான விதைகள் மற்றும் ரூ.0.21 கோடி மதிப்பிலான வேளாண் கருவிகளை விற்பனை செய்துள்ளது.

### (iii) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

உறுப்பினர் ஒப்பந்த பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி செய்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு தமிழ்நாட்டில் 45 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 21,740 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

### (iv) கூட்டுறவு அச்சகங்கள்

26 கூட்டுறவு அச்சகங்கள் தங்கள் செயல் எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அரசு



அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் அச்சுத்தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன. இக் கூட்டுறவு அச்சகங்கள் 2015–16 ஆம் ஆண்டில் ரூ.62.33 கோடி மதிப்பிலான அச்சுப்பணிகளையும், 2016–17 ஆம் ஆண்டில் ரூ.57.17 கோடி மதிப்பிலான அச்சுப்பணிகளையும் மேற்கொண்டுள்ளன.

தனியார் அச்சகங்களுடன் போட்டியிடும் வகையில் சென்னை, வேலூார், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகரங்களில் செயல்பட்டு வரும் 7 கூட்டுறவு அச்சகங்கள் ரூ.3.68 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. இந்நவீனமயமாக்கத்தால் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் அச்சுப்பணிகளை தரமான முறையில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்கின்றன.

### கூட்டுறவு அச்சகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்

திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தின் செயல்பாட்டினை மேம்படுத்திட ஏதுவாக

2014 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டு அச்சகம் தற்போது புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

**2016–17ஆம் ஆண்டில் கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்**

தற்பொழுது வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வரும் நாமக்கல் கூட்டுறவு அச்சகத்திற்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிமனையுடன் கூடிய புதிய அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது. இராமநாதபுர மாவட்ட (இருப்பு: காரைக்குடி) மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்திட முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.19.22 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது.



# இயல்–V

# பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

## 1. முன்னுரை

**1.1.** அனைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதிசெய்வதில் பொதுவிநியோகத் திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகின்றன. மாநிலத்தில் மொத்தம் உள்ள **34,841** நியாயவிலைக்கடைகளில் **32,715** நியாயவிலைக் கடைகளை கொண்டு ஒரு விரிவான விநியோக தொடரமைப்பை கூட்டுறவுகள் உருவாக்கியுள்ளன.

**1.2.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் பணியை **97** முதன்மைச் சங்கங்கள், அதாவது **26** கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், **59** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், **9** பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், **2** தொடக்க வேளாண்மைக்

கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மற்றும் 1 நகர கூட்டுறவு கடன் சங்கமும் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் **4,193** இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. மேலும் **8** கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், **31** கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், **147** பிரதம கூட்டுறவுப் பண்டகசாலைகளும், **120** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், **7** பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், **6** நகர கூட்டுறவுச் கடன் சங்கங்களும் மற்றும் **6** இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் **325** கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

## 2. நியாய விலைக் கடைகள்

**2.1.** மொத்தமுள்ள **34,841** நியாயவிலைக்கடைகளில் கூட்டுறவு நிறுவனங்கள் **32,715** நியாய விலைக் கடைகளை செயல்படுத்தி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு :–



| வ. எண் | நியாயவிலைக் கடைகளின் விவரம் | கிராமப்புறம் | நகர்ப்புறம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | முழுநேரம் | 17,472 | 6,213 | 23,685 |
| 2. | பகுதிநேரம் | 8,590 | 440 | 9,030 |
| 3. | மொத்த நியாயவிலைக்கடைகள் | **26,062** | **6,653** | **32,715** |

**2.2.** நியாயவிலைக் கடைகள் மூலம் சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை அதிகபட்ச மானிய விலையிலும், கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி தேயிலை, அம்மா உப்பு போன்றவை நியாயமான விலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், கூட்டுறவுச் சங்கங்கள் நியாயவிலைக் கடைகளை மட்டுமின்றி, பிரத்தியேகமாக **259** மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களையும் நடத்தி வருகின்றன.

## 3. நகரும் நியாய விலைக் கடைகள்

**3.1.** மலைப்பகுதிகளில் வாழும் மலை வாழ்மக்கள் மற்றும் எளிதில் அணுக இயலாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி விநியோகம் செய்யும் பொருட்டு 2011–12 ஆம் ஆண்டு வரை 15 நகரும் நியாயவிலைக் கடைகள் செயல்பட்டு வந்தன. மேலும்,

இதன் தொடர்ச்சியாக 22 புதிய நகரும் நியாயவிலைக்கடைகள் தொடங்கப்பட்டன. மொத்தமுள்ள 37 நகரும் நியாயவிலைக்கடைகளில் 15 நகரும் நியாய விலைக் கடைகளுக்கு சொந்த வாகனங்கள் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதி / கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2012–13ம் ஆண்டில் 10 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ஒரு வாகனம் வீதம் 10 வாகனங்கள் **ரூ.94.95** இலட்சம் மதிப்பில் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டன. 2013–14 ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டத்தில் மோட்டாம்பட்டி மற்றும் கிளாக்காடு ஆகிய இரண்டு பெரும்பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் இராவணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், சென்னை நகர்ப்பகுதியில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை ஆகிய சங்கங்களுக்கு தலா 1 வாகனம் வீதம் 5 வாகனங்கள் பிரதம கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி



நிதியிலிருந்தும், **ரூ.66.82** இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டன.

### 4. நியாய விலைக் கடைகளின் செயல்பாட்டினை முழு கணினி மயமாக்குதல்

பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்தில், உரிய பயனாளிகளுக்கு, முழுமையாக சென்றடைவதனை கண்காணிக்கும் வகையில் நியாயவிலைக்கடைகளின் செயல்பாடுகள் அனைத்தும் முழுமையாக கணினி மயமாக்கப்பட்டுள்ளன. கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தொய்வின்றி நகர்வு செய்ய அனைத்து விவரங்களும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து நியாய விலைக் கடைகளிலும் விற்பனை முனைய கருவிகள் (POS Devices) இணைக்கப்பட்டு அதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களின் விற்பனை கண்காணிக்கப்படுகிறது. அனைத்து குடும்ப அட்டைதாரர்களின் விவரங்கள், கைபேசி எண்கள் மற்றும் ஆதார் எண்கள் விற்பனை முனைய கருவிகளில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து பொது விநியோகத் திட்ட களப் பணியாளர்கள்

மற்றும் நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கு விற்பனை முனைய கருவிகளின் பயன்பாடு தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் கிடங்குகளிலிருந்து நகர்வு செய்வது முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யும் வரை அனைத்து பரிவர்த்தனைகளும் இணையதள வாயிலாக பெறப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. இதில் குறைபாடு ஏதேனும் இருக்கும் பட்சத்தில் அதனை களைய உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறைகள் மற்றும் புகார்களை, இணையதளம் மூலம் பெறுவதுடன் இலவச தொலைபேசி எண்கள் '**1967**' மற்றும் **1800–425–5901** மூலமும் பெறப்பட்டு அவை உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் சிறந்த பங்களிப்பாலேயே இம்மிகப்பெரிய மின்ஆளுமை திட்டமானது மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



**5. இதர பொருட்களின் விற்பனை விவரம்**

**(i) ஊட்டி தேயிலை விற்பனை விவரம்**

சர்வதேச சந்தையில் தேயிலை தூளுக்கு ஏற்பட்ட கடும் விலை வீழ்ச்சியின் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கடந்த **2001**ஆம் ஆண்டில், வாழ்வாதாரத்தை இழந்து பாதிக்கப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், இண்ட்கோசர்வ் நிறுவனத்திலிருந்து ஊட்டி தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. **2014–15ம்** ஆண்டு முதல் **2016–17ம் ஆண்டு வரை 9,498** மெ.டன் ஊட்டி தேயிலை நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(ii) அம்மா உப்பு விற்பனை விவரம்**

அயோடின் பற்றாக்குறையால் ஏற்படும் குறைபாடுகளிலிருந்து மக்களை பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து அயோடின் கலந்த உப்பு கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவுத்துறை

நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமாக, விற்பனை செய்யப்படுகின்றன. **2016–17இல் 24,279** மெ.டன் அம்மா உப்பு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 6. நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் **32,715** நியாயவிலைக்கடைகளின் கட்டட விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | நியாயவிலைக்கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சொந்தக் கட்டடம் | 4,250 |
| 2 | அரசுக் கட்டடம் | 15,443 |
| 3 | வாடகையில்லா கட்டடம் | 5,482 |
| 4 | வாடகைக் கட்டடம் | 7,540 |
| | **மொத்தம்** | **32,715** |

நியாயவிலைக்கடைகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு பல்வேறு கட்டங்களாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் **1751** நியாயவிலைக்கடைகளுக்கான புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.



## 7. நியாயவிலைக்கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் சேவை மனப்பான்மையுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும் விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன. பொதுவிநியோக திட்ட நடைமுறை செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விளிம்புத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் நியாயவிலைக் கடைகளின் நட்டத்தை ஈடு கட்டும் பொருட்டு அரசால் மானியம் வழங்கப்படுகிறது.

**2010–11** முதல் **2016–17** வரை பொது விநியோக திட்ட மானியமாக **ரூ.985.87** கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

# இயல்– VI

# கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

## 1. முன்னுரை

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பிரதான நோக்கத்துடன் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும் இந்நிறுவனங்கள் பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் நடத்துவதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை கோட்பாடுகளை மக்களிடம் கொண்டு செல்கின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர இலாபத்தில் ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் வசூலித்து அதனைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி,



கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு தொடர்பான செய்திகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

## 2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம்

மாநிலத்தில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளையும் நடத்துகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் வகுப்பறை பயிற்சி பெறாத கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல்வழிக் கல்வி மூலம் கூட்டுறவு பட்டயப் பயிற்சியினை அளித்து வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் 1311 மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளனர். மேலும், 1168 பணியாளர்கள் அஞ்சல்வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அனைத்துக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களிலும் கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைந்து வணிகவியல் மற்றும் வணிக மேலாண்மையியல் பட்டப்படிப்பு, வணிக மேலாண்மை மற்றும் கணினிப் பயன்பாட்டில் முதுகலை பட்டப்படிப்பு ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 357 மாணவர்கள் தொலைதூர கல்வி மூலம் பட்டப்படிப்பிற்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

‘‘சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு ஒன்பது கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன் கூடிய சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி அளிக்கப்படுகின்றன. இதுவரை 101 மாணவர்கள் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். மேலும், இவர்களுக்கான வேலைவாய்ப்புகள் ஊக்கமளிப்பதாக உள்ளன.

## 3. தொழிற் கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் மூன்று கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தலா ஒன்று வீதம் பர்கூர், பட்டுக்கோட்டை மற்றும் அருப்புக்கோட்டை



ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில் கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி (COPA), நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, தையற்கலை, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2016–17 இல் 165 மாணவர்கள் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், இலால்குடி கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2016–17 ஆம் ஆண்டில், 412 மாணவர்கள் மேற்காணும் பட்டயப் பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால் (புதுடெல்லி) மதுரை மற்றும்

சென்னையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி அளித்து வருகின்றன. கூட்டுறவுத்துறை பணியாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கும் குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. 2016–17இல், 9917 பணியாளர்கள் குறுகிய கால பயிற்சி பெற்றுள்ளனர். மேற்படி இரு மேலாண்மை நிலையங்களும் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பை அளித்து வருகின்றன.

2016–17 ஆம் ஆண்டில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் மூலம் 1818 பணியாளர்கள் 73 குறுகிய கால பயிற்சி பெற்றுள்ளனர்.

**5. திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்**

கிராமப்புறங்களில் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெறத்தக்க வகையில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்



கழகத்துடன் இணைந்து சில்லறை விற்பனையாளர் விற்பனைத் திறன் மேம்பாட்டு பயிற்சியினைக் கட்டணம் ஏதுமின்றி நடத்தி வருகின்றது. தமிழக அரசு இப்பயிற்சிக்கு ரூ.237.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் மற்றும் சென்னை, நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் மூலம் இப்பயிற்சி 6.2.2014 முதல் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியானது 10 நாள் வகுப்பறை பயிற்சியும், 5 நாள் செயல்முறை பயிற்சியும் கொண்டதாகும். இதுவரை 20 கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களில் 5080 பேர் பயிற்சி முடித்துள்ளனர். 10,000 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் வரை இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சியில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் தனியார் நிறுவனங்கள், சிறப்பங்காடி, சுயசேவைப் பிரிவு ஆகியவற்றில் விற்பனையாளர்களாக சேர சிறந்த வாய்ப்புகள் உள்ளன.

**6. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும்

வகையில் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம் கிராம பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5 இலட்சம் வைப்புத் தொகை வைத்துள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரையிலும் 21 ஆராய்ச்சித் திட்ட செயல்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**7. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு**

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3% தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுவிக்கப்படுகிறது. கூட்டுறவு ஆராய்ச்சிக்கு மானியமாகவும், அதே சமயம் கூட்டுறவு வளர்ச்சிக்கு



வட்டியில்லாக் கடனாகவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011 –12 முதல் 2015–2016 வரை நான்காண்டுகளில் ரூ.32.60 கோடி மானியமாகவும், 2011–12 முதல் 2015–16 வரை ரூ. 88.42 கோடி வட்டியில்லாக் கடனாகவும், விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், நுகர்வோர் சுய சேவைப் பிரிவை நவீனப்படுத்துதல், வங்கிகளை நவீனப்படுத்துல் மற்றும் கணினிமயமாக்குதல், அலுவலகக் கட்டிடம் கட்டுதல், துரித சிப்பமிடும் கருவிகள் வாங்குதல், எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகம் கட்டுதல், நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் பெடல் தறிகளை வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

01.04.2016 முதல் 31.03.2017 வரை ரூ.3.86 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 01.04.2016 முதல் 31.03.2017 வரை ரூ.43.72 கோடி வட்டியில்லாக் கடனாகவும் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 8. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2% தொகையை அளிக்கின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2011–12 முதல் 2015–16 வரை நான்காண்டுகளுக்கு ரூ.34.91 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 31.03.2017 வரை ரூ.5.63 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதி கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம், சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல், அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல், ஆகியவற்றிற்கும் பயன்படுகிறது. மேலும், புதிதாக பொறுப்பேற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும்



துணைத் தலைவர்கள் அனைவரும் கூட்டுறவு மேலாண்மையில் நிபுணத்துவம் பெற மூன்று கட்டமாக பயிற்சி வகுப்புகளும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# இயல்–VII

## கூட்டுறவுத் தேர்தல்

**1.1.** தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 14 ஆண்டுகளுக்குப் பின் 2013ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில் 33–A என்ற புதிய பிரிவு ஒன்றினை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க (நான்காவது திருத்தம்) சட்டம் 2012–ன்படி சேர்த்தது. அப்புதிய பிரிவு தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்திட ஏதுவாக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைத்திட வகை செய்துள்ளது. பிரிவு 33–A யின் உப பிரிவு (2)–ன் கீழ் அரசினால் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்படத் துவங்கியது.

**1.2.** 97வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் 2011ல், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகக் குழுவிலும் ஆதி திராவிட அல்லது பழங்குடியினருக்கு ஒரு இடமும்



மற்றும் பெண்களுக்கு இரண்டு இடமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவில் ஆதி திராவிடர் / பழங்குடியினருக்கு 18% மற்றும் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தில், 2013 ஆம் ஆண்டில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சமூக நீதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

**1.3.** தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால், 2013 ஆம் ஆண்டிலிருந்து 31.3.2017 வரை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படும் 24,370 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. இந்த கூட்டுறவு நிறுவனங்களில் 2,40,151 நபர்கள் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் 35,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராவர் மற்றும் 66,880 நபர்கள் பெண்கள் ஆவர். மேலும் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட தேர்தலின் மூலம் 24,331 நபர்கள் தலைவர்களாகவும் 24,333 நபர்கள் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# இயல்—VIII

## ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டம்

**1.** ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டமானது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கும் பல்வேறு வகையான கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு, பங்கு மூலதனம், விளிம்புத்தொகை போன்றவற்றை வழங்கிட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் தோற்றுவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் தமிழ்நாடு அரசின் ஆலோசனையின்படி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால், கண்டறியப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

**2.** இத்திட்டத்திற்கான நிதி உதவியை அரசால் கூட்டுறவுகளுக்கு விடுவிக்கப்பட்டு பின்னர் மறு நிதியாக தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திலிருந்து மீள பெறப்படுகிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது திட்ட செயலாக்கத்திற்கு முகமையாக சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் செயல்படும். நிதி வழங்கும் முறை கீழ்க்கண்டவாறு:—



| வ. எண் | திட்டப்பணி | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்கு (%) | | | மாநில அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கடன் | மானியம் | மொத்தம் | கடன் | பங்கு மூலதனம் | மானியம் | மொத்தம் |
| 1 | கட்டுமானப்பணிகள், ஆலை & இயந்திரங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் | 100 | — | 100 | 50 | 50 | — | 100 |
| 2 | கூட்டுறவுகளுக்கு விளிம்புத் தொகை/ பங்கு மூலதனம் | 100 | — | 100 | — | 100 | — | 100 |
| 3 | மனித ஆற்றல் மேம்பாடு & பயிற்சி மற்றும் ஊக்கத்தொகைகள் | — | 50 | 50 | — | — | 100 | 100 |
| 4 | திட்ட செயலாக்க முகமை மற்றும் மாநில கண்காணிப்புக் குழுவுக்கு நிர்வாக நிதி உதவிகள் | — | 50 | 50 | — | — | 100 | 100 |

**3.** தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் 1989—ஆம்ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதுவரை திட்டச்

செயலாக்கத்திற்காக 31 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ரூ.432.14 கோடி திட்ட மதிப்பீட்டில், 27 மாவட்டங்களில் திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்சமயம் நீலகிரி, நாமக்கல், திருவள்ளூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் ரூ.214.50 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நிறைவேற்றத்திலுள்ளன.



# நிறைவுரை

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் கடந்த ஆண்டுகளில் போதுமான அளவிற்கு முன்னேற்றம் எய்தியுள்ளது. விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் கூட்டுறவு நிறுவனங்கள் முக்கிய நிறுவனங்களாக திகழ்கின்றன. கூட்டுறவுகள், அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்க செய்வதன் மூலம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை நிலை நிறுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் இதர கடைகளின் மூலம் நுகர்வோரையும் விளைவிப்போரையும் இணைப்பதில் போதிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளதன் மூலம் இடைத்தரகர்களை வெளியேற்றியுள்ளன.

மாறிவரும் தொழில் நுட்பங்களின் மாற்றங்களுக்கேற்ப, இதர நிறுவனங்களுக்கு இணையாக, கூட்டுறவு நிறுவனங்கள், தமது

செயல்பாடுகளை மேம்படுத்தி செயல்படுவதில் முன்னோடியாக திகழ்கின்றன. மையவங்கியியல் தீர்வு முறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை கணினிமயமாக்குதல் மற்றும் கூட்டுறவு பண்டகசாலைகளில் வணிக ஆதாரத்தை திட்டமிடுதல் ஆகியவை இவ்வாறான முக்கிய பணிகளில் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் போதிய முன்னேற்றம் அடைந்ததுடன் அனைத்து மக்களின் முன்னேற்றத்திற்காக குறிப்பாக ஏழை மக்கள் மற்றும் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து செயல்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ செயல்படுத்தும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் கூட்டுறவு நிறுவனங்கள் அணிவகுத்துச் செல்லும் என்பதை உறுதிபடுத்துவோம்.

**செல்லூர் கே.ராஜூ**
**கூட்டுறவுத் துறை அமைச்சர்**